**அ.வ.எண். 395/2022**
**வா.சா.1 : செண்பகம்**
**தேதி : 08.01.2026**
**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**
**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

ஆதியில் தாவா சொத்து கிருஷ்ணன் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். கிருஷ்ணனுக்கு ராமசாமி என்கிற ராமன், கேசவன் மற்றும் காளியப்பன் ஆகியோர் வாரிசுகள். வாதிகள் பிரதிவாதிகள் அனைவரும் தகப்பனார் ராமசாமியின் வாரிசுகள் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் கேசவன் மற்றும் காளியப்பன் ஆகியோரை ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். உங்கள் தகப்பனார் சங்கப்பிள்ளை மலேசியாவில் வாழ்ந்து அங்கேயே இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். என் தகப்பனாரின் இறப்புச்சான்றிதழ் மலேசியாவிலும், வாரிசு சான்றிதழ் கரூரில் பெற்றுள்ளோம். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 5 ஏக்கர் 29 செண்ட் என்று சொன்னால் சரிதான். வாதிகள் அனைவரும் சங்கப்பிள்ளையின் வாரிசுகள் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிகள் அனைவரும் பழனிச்சாமியின் வாரிசுகள் என்று சொன்னால் சரிதான். ராமசாமியின் வாரிசுகள் இருவர் அவர்கள் சங்கப்பிள்ளை மற்றும் பழனிச்சாமி. கேசவனிடமிருந்து அவருடைய பங்கான 1/3 பங்கை 1970 ஆம் வருடம் கிரையம் பெற்றதற்கான அசல் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் நகைலைத்தான் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. ராமசாமியின் வாரிசுகளான

வாதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் தலா 1/2 பங்கு உள்ளது என்றும் நீங்கள் கோரியுள்ள 2/3 பங்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. பாப்பாயிஅம்மாள் இறுதி காலம் வரை தனியாகத்தான் வாழ்ந்துவந்தார். பாப்பாயி அம்மாளின் இறுதிச்சடங்குகள் அனைத்தும் பிரதிவாதிகள் தான் பார்த்துவந்தார் என்று சொன்னால் சரியல்ல. ஆகையால் நீங்கள் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.01.08 17:58:44 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.